## ரூ. 62.51 கோடியில்

# 740 பணி புரியும் மகளிர் பயன்பெற 12 புதிய 'தோழி' விடுதிகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல்!

**சென்னை, நவ. 15 -**

**ரூ. 62.51 கோடி மதிப்பீட்டில் 740 பணி புரியும் மகளிர் பயன்பெறும் வகையில் 12 புதிய தோழி விடுதிகள் அமைக்கும் பணி, ரூ.27.90 கோடி மதிப்பீட்டில் கோயம்புத்தூர் "பூஞ்சோலை" அரசினர் மாதிரி கூர் நோக்கு இல்லம் மற்றும் திருச்சிராப்பள்ளி அரசினர் கூர்நோக்கு இல்லத்திற்கு புதிய கட்டடங்கள் கட்டும் பணிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டி, இராயபுரம் அரசினர் குழந்தைகள் இல்லத்தில் ரூ.7 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தை திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.11.2025) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், திருப்பத்தூர், நாமக்கல், மயிலாடுதுறை, விருதுநகர், திண்டுக்கல், நீலகிரி, இராம நாத புரம், தூத்துக்குடி, புதுக்கோட்டை, அரியலூர், திருவாரூர், கன்னியா குமரி ஆகிய இடங்களில் 62 கோடி 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 740 பணிபுரியும் மகளிர் பயன்பெறும் வகையில் 12 புதிய தோழி விடுதிகள் அமைக்கும் பணிகள், கோயம்புத்தூர் "பூஞ்சோலை" அரசினர் மாதிரி கூர்நோக்கு இல்லம் மற்றும் திருச்சிராப்பள்ளி அரசினர் கூர்நோக்கு இல்லத்திற்கு 27.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய கட்டடங்கள் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டி. சென்னை, இராயபுரம் அரசினர் குழந்தைகள் இல்லத்தில் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.

**பணிபுரியும் மகளிர் பயன்பெறும் வகையில் "தோழி விடுதிகள்"!**

பணி நிமித்தமாக தங்கள் சொந்த ஊர்களை விட்டு பிற நகரங்களுக்கு இடம் பெயரும் பணிபுரியும் பெண்களின் தேவைகளை உணர்ந்து தரமான, பாதுகாப்பான மற்றும் குறைந்த கட்டணத்தில் பெண்களுக்கான தங்கும் விடுதிகளான "தோழி விடுதிகள்" தமிழ்நாடு அரசின் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் பல்வேறு மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் தங்கும் பெண்களின் தேவைகளுக்கேற்ற பல்வேறு வகையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. தோழி விடுதிகளின் அமைவிடம், வசதிகள், கட்டண விவரங்கள் உள்ளிட்ட தகவல்களையும், முன்பதிவு செய்வதற்கான வசதியையும் www.thozhi.in என்ற இணையதளத்தின் மூலம் பெறலாம்.

தமிழ்நாட்டில் இதுவரை சென்னை, திருவள்ளூர், கோயம்புத்தூர், செங்கல்பட்டு, திருச்சிரா பள்ளி, தஞ்சாவூர், வேலூர், சேலம், விழுப்புரம், திருநெல்வேலி, பெரம்பலூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி ஆகிய 15 மாவட்டங்களில் 19 தோழி விடுதிகள் நிறுவப்பட்டு, 1,824 பணிபுரியும் மகளிர் பயனடையும் வகையில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, சென்னையில் தரமணி மற்றும் சேப்பாக்கம், மதுரை, கோயம்புத்தூர், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, ஈரோடு, காஞ்சிபுரம், கடலூர், தர்மபுரி, தேனி, சிவகங்கை, ராணிப்பேட்டை, கரூர் ஆகிய இடங்களில், 176.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 14 புதிய 'தோழி' விடுதிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 21.05.2025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, தற்போது கட்டுமானப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இவ்விடுதிகள் 2,000 பணிபுரியும் பெண்கள் தங்கி பயன்பெறும் வகையில் உருவாக்கப்படுகின்றன.

**12 புதிய தோழி விடுதிகள் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்!**

அதன் தொடர்ச்சியாக, பணிபுரியும் மகளிர் விடுதிகளின் தேவைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு, கூடுதலாக திருப்பத்தூர், நாமக்கல், மயிலாடுதுறை, விருதுநகர், திண்டுக்கல், நீலகிரி, இராமநாதபுரம், தூத்துக்குடி, புதுக்கோட்டை, அரியலூர், திருவாரூர், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் மொத்தம் 62 கோடி 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 740 பணிபுரியும் மகளிர் பயன்பெறும் வகையில் அமைக்கப்படவுள்ள 12 புதிய தோழி விடுதிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று அடிக்கல் நாட்டினார்கள். இதன்மூலம் தமிழ்நாட்டில் 27 புதிய தோழி விடுதிகள், கூடுதலாக 2,790 மகளிர் பயன்பெறும் வகையில் வரும் ஆண்டில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளன.

இத்தோழி விடுதிகளில் பயோமெட்ரிக் உள் நுழைவு, 24x7 பாதுகாப்பு வசதி, Wi Fi வசதி, சிசிடிவி வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், ஆரோக்கியமான உணவு, பொழுதுபோக்கு அறை, குளிரூட்டப்பட்ட அறை, சுடுநீர் வசதி, சலவை இயந்திரம், இஸ்திரி வசதி, வாகன நிறுத்துமிடம் போன்ற வசதிகளுடன் குறைந்த வாடகையில் வழங்கப்பட்டு வருகின்றன. மகளிரின் பாதுகாப்பான, வசதியான தங்குமிடங்கள் தேவைகளை கருத்தில் கொண்டு, பணிபுரியும் பெண்கள் மட்டுமல்லாது, பயிற்சி, உயர்கல்வி, நேர்காணல் போன்ற குறுகிய காலங்களுக்கு நகரங்களுக்கு வரும் அனைத்து மகளிரின் தேவைகளையும் கருத்தில் கொண்டு, இவ்விடுதிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

**கோயம்புத்தூர் "பூஞ்சோலை" அரசினர் மாதிரி கூர்நோக்கு இல்லம் மற்றும் திருச்சிராப்பள்ளி அரசினர் கூர்நோக்கு இல்லத்திற்கு அடிக்கல் நாட்டுதல்!**

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் கீழ் செயல்படும் அரசினர் கூர்நோக்கு இல்லங்களில், சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் சிறார்கள் தங்கவைத்து பரா மரிக்கப்பட்டு வருகிறார்கள். இங்கு சிறார்களுக்கு தேவையான உணவு, உடை மற்றும் இதர அடிப்படை வசதிகள் போன்றவை வழங்கப்படுவதுடன், இச்சிறார்களை நல்வழிப்படுத்தும் நோக்கத்துடன் ஆற்றுப்படுத்துதல், போதைப்பொருள் பழக்கத்திலிருந்து விடுபடுவதற்கான ஆலோசனைகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், அடிப்படை திறன் வளர்ப்புப் பயிற்சிகள் போன்ற சேவைகளும் வழங்கப்படுகின்றன.

இந்த இல்லங்களின் செயல்பாடுகளை மேம்படுத்த ஓய்வு பெற்ற நீதியரசர் சந்துரு அவர்கள் தலைமையில் அரசால் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், கோயம்புத்தூர் மாவட்டத்தில் "பூஞ்சோலை" என்ற பெயரில் அமையவுள்ள அரசினர் மாதிரி கூர்நோக்கு இல்லத்திற்கு 16 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும், திருச்சிராப்பள்ளி, அரசினர் கூர்நோக்கு இல்லத்திற்கு 10 கோடியே 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கும் முதலமைச்சர் அவர்கள் நேற்று அடிக்கல் நாட்டினார்கள்.

**இராயபுரம் அரசினர் குழந்தைகள் இல்லத்தில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தை திறந்து வைத்தல்!**

சென்னை, இராயபுரம் அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு தற்போது 14,876 சதுர அடி பரப்பளவில் தரை மற்றும் முதல் தளம் கொண்ட புதிய கட்டடம் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்கள். இந்த இல்லத்தில் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் 70 சிறுவர்கள் தங்கி பயன்பெறும் வகையில் சிறுவர்கள் தங்கும் அறைகள், வகுப்பறைகள். நூலக அறை, திறன் பயிற்சி அறை, மருத்துவ அறை, சமையலறை, உணவுக்கூடம், உள்ளிட்ட அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் இப்புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது.


# பாமரத் தலைவருக்கு தெரியுமா ஓலைச்சுவடி வாசனை?

சென்னையில் இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறும் முற்போக்கு புத்தகக் கண்காட்சியின் மகத்தான வெற்றி சிலரை வயிறெரியச் செய்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் 75 ஆண்டு கால வரலாற்றை எடுத்துரைக்கும் 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு ' நூலைக் கண்டு அஞ்சும் அறிவிலிகள் அதை 'அறிவுத்திருவிழா என்ற பெயரில் பரண்களில் கிடக்கும் பழைய ஓலைகளை தூசுதட்டி தோரணம் கட்டப்பார்க்கும் கட்சி' யென வெற்றுக்கேலி பேசி தங்கள் பாமரத்தனத்தை பச்சையாக காட்டிக்கொண்டுள்ளனர். தமக்கென ஒரு தத்துவம் இல்லாதவர்கள் தலைமைத்துவமற்ற தலைவனை கேளிக்கை பொருளாக கொண்டு தினம் தினம் அரசியல் என்ற பெயரில் அபத்த நாடகங்களை ஆடுபவர்கள் இப்படி உளறுவதில் வியப்பில்லை.

தமிழர்களின் மரபும் உயரிய பண்பாட்டு மாண்புகளும் பரண்களில் கிடந்த பழைய ஓலைச்சுவடிகளிலேயே கண்டெடுக்கப்பட்டன. படையெடுப்பாளர்களாலும் பண்பாட்டு ஆதிக்க சக்திகளாலும் இருளில் மூழ்கடிக்கப்பட்ட தமிழர்களின் மகத்தான சமூக பண்பாட்டு இலக்கிய மரபுகள் இந்த பழைய பனையோலைகளாலேயே மீட்டெடுக்கப்பட்டன.

சங்க இலக்கியங்கள், திருக்குறள், நீதிநெறி நூல்கள், பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் என அனைத்தும் தமிழறிஞர்களாலும் மேலைநாட்டு ஆய்வாளர்களாலும் பனையோலைகள் வழியே மீட்கப்பட்டுதான் இன்றைய தமிழ் பண்பாட்டு மரபை கண்டடைந்திருக்கிறோம். இந்த பனையோலைகளில் நெருப்பில் எரிந்தவை போக, நீரில் அழிந்தவை போக எஞ்சிய சுவடிகளே இத்தனை மகத்தான இலக்கிய பண்பாட்டு மரபை காட்டுமெனில் அவையெல்லாம் முழுமையாக கிடைத்தி ருந்தால் அது எத்தகைய பெரும் புதையலாக இருந்திருக்கும்?

**மனுஷ்ய புத்திரன்**
மாநில ஆலோசகர், தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி.



இந்த மகத்தான திராவிட தமிழ் இலக்கிய பண்பாட்டு மரபை கீழடியில் தொடங்கி சங்க இலக்கியம் வழியாக சமகால இலக்கியம் வரை உலகமே வியக்கும் வண்ணம் நிலைநிறுத்தியிருக்கிறோம். இன்னொரு புறம் 75 ஆண்டுகால திமுக வரலாறு என்பது ஒரு கட்சியின் வரலாறு அல்ல. அது ஒரு நூற்றாண்டு கால நவீன தமிழக வரலாறு. நீதிக்கட்சியிலிருந்து தொடங்கி சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என சமூகநீதிக்காகவும் பாலின சமத்துவத்திற்காகவும் மாநில உரிமைகளுக்காகவும் மொழி உரிமைக்காகவும் நடத்தப்பட்ட திராவிட இயக்கத்தின் இடையறாத போராட்டத்தின் வரலாறு.

பெரியாரும் அண்ணாவும் கலைஞரும் தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினும் தமிழ்நாட்டை எல்லாத் தளங்களிலும் எப்படி புத்துயிர் பெற செய்தார்கள் என்பதை எடுத்துரைக்கும் வரலாறு. இந்த வரலாற்றைத்தான் 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு ' நூல் ஆழமாக விவரிக்கிறது. திமுகவிற்கு எதிரான அவதூறுகள் பொய்கள் புனை சுருட்டுகளுக்கு எதிராக இந்த நூல் இளைஞர்கள் கையில் ஒரு போராயுதமாக திகழும் என்பதால்தான் இந்த சமகால வரலாற்றை பழைய பனையோலைகள் என பரிகசிக்க முயற்சிக்கிறார்கள்.

ஐந்தாம் தலைமுறையாக திராவிடத்தின் ஒளிமிகு தத்துவத்தை உயர்த்தி பிடிக்கும் ஒரு இளம் தலைவராக உதயநிதி ஸ்டாலின் எழுந்து வருவதைக் கண்டு அச்சத்திலும் ஆத்திரத்திலும் அவர்கள் பதறுவது தெரிகிறது. உதயநிதியை முன்னிறுத்துவதற்காகவே இந்த அறிவுத் திருவிழா என சிலர் சமூக வலைதளங்களில் அவதூறு செய்கிறார்கள். ஒரு புத்தகக் கண்காட்சியை நடத்தியா உதயநிதி அங்கீகாரம் தேடவேண்டிய இடத்தில் இருக்கிறார்? அவர் இளைஞரணி செயலாளராக பொறுப்பேற்ற பிறகு திமுக பெற்ற தொடர் தேர்தல் வெற்றிகளில் அவருடைய பரப்புரை பெரும் பங்காற்றியது. ஒற்றை செங்கலால் பாசிச சக்திகளை அதிர வைத்தவர். சனாதான சக்திகளுக்கெதிராக சமரசமற்று போராடுகிறவர். திராவிட இயக்கத்தை அதன் தத்துவார்த்த பின்புலத்தில் புத்தாக்கம் செய்கிறவர்.

விளையாட்டு துறையில் தமிழகத்தை இந்தியாவின் முதன்மையான இடத்திற்கு உயர்த்துவதற்காக எண்ணற்ற முயற்சிகளை எடுத்து வருவதுடன் உலகப் புகழ் பெற்ற பல விளையாட்டு போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்தி காட்டியவர். இளைஞரணி செயலாளராக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சராக துணை முதலமைச்சராக அவர் ஆற்றியிருக்கும் பணிகள் அவரை புகழின் உச்சிக்கு கொண்டு சென்றிருக்கின்றன. கழகம் அவரை அடுத்தகட்டத் தலைவராக முழுமையாக ஏற்றிருக்கிறது.

**இந்தநிலையில் அவரது எண்ணற்ற பணிகளுக்கு நடுவே திமுகவின் 75ஆம் ஆண்டையொட்டிய இந்த அறிவுத்திருவிழாவிற்கு தனது முழுமையான உழைப்பையும் அர்ப்பணிப்பையும் செய்திருக்கிறார். பல நாட்கள் வள்ளுவர் கோட்டத்தில் இருந்து இந்த பணிகளை அவர் நேரடியாக ஒருங்கிணைத்ததுடன் ஒவ்வொரு நாள் நிகழ்வையும் பற்றி தினமும் எழுதி வருகிறார். அறிவுசார் பரப்புரை பணிகளில் பெரியாரும் அண்ணாவும் கலைஞரும் தமிழக முதல்வரும் எத்தகைய தீவிரத்துடன் கடந்த காலத்தில் உழைத்திருக்கிறார்களோ அதே ஈடுபாட்டுடனும் அர்ப்பணிப்புடனும் உதயநிதி செயல்பட்டு வருகிறார்.**

இந்த முற்போக்கு புத்தகக் கண்காட்சியில் திராவிடம், தமிழ்த்தேசியம், இடதுசாரி தத்துவம், அம்பேத்கரியம் என அனைத்து முற்போக்கு சித்தாந்த நூல்களும் காட்சிப் படுத்தபட்டிருக்கின்றன. தினம் தினம் எழுச்சிமிகு உரைகள் இடம்பெறுகின்றன. பல்வேறு முற்போக்கு இயக்கங்களின் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

**பரந்துபட்ட ஜனநாயக கருத்தோட்டத்தோடு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்த அறிவுத் திருவிழாவை அறிவிலிகள் கண்டு அஞ்சுவதில் வியப்பேது? அவர்கள் திமுகவை அவமதிப்பதாக நினைத்துக்கொண்டு மேலும் மேலும் தங்களை தாங்களே அவமானப்படுத்திக் கொள்கிறார்கள். தங்களது பாமரத்தினத்தை பச்சையாக வெளிச்சமிட்டு காட்டுகிறார்கள்.**

அறிவார்ந்த தலைவர்கள் அறிவார்ந்த தொண்டர்களை உருவாக்குகிறார்கள். பாமரத் தலைவர்கள் தங்களது பாமரத் தனத்தை தங்களை பின்பற்று பவர்களுக்கும் பரப்பி அவர்களை வீழ்ச்சியடைய வைக்கிறார்கள்.


29-வது ஆண்டு நினைவு அஞ்சலி

புதுக்கோட்டை
அ.பெரியண்ணன் Ex.MLA
முன்னாள் அரசு கொறடா, மாவட்ட கழக செயலாளர்



தோற்றம் : 20.11.1931 ❖ மறைவு : 15.11.1996

என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்...
தலைவர் கலைஞர் நல்லாசியுடன்,
தலைவர் தளபதி தலைமையில்...
சின்னவர் உதயநிதி ஸ்டாலின் வழி நின்று பணியாற்றுவோம்...

இலண்:
பெரியண்ணன் அரசு M.Sc.,Ex.MLA.,
EX.மாவட்ட கழக செயலாளர்

முல்லை, புதுகை.





தி.மு.க.
இளைஞர் அணி

புதிய நிர்வாகிகளுக்கான
2026 தேர்தல் பணி பயிற்சி பாசறைக் கூட்டம்

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து, புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள், பகுதி வாரியாக நடைபெற உள்ளன. மண்டலம்–1, சென்னை வடக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட இராயபுரம் கிழக்குப் பகுதி, மேற்குப் பகுதி, பெரம்பூர் வடக்குப் பகுதி, தெற்குப் பகுதி, ஆர்.கே.நகர் கிழக்குப் பகுதி மற்றும் மேற்குப் பகுதி ஆகிய பகுதிகளில் பயிற்சிப் பாசறைக் கூட்டம் கீழ்க்காணும் தேதிகளில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | பகுதி | இடம் |
|---|---|---|---|
| 15.11.2025 சனிக்கிழமை | மாலை 5.00 மணி | இராயபுரம் கிழக்குப் பகுதி | மைனா பார்ட்டி ஹால், ஜி.ஏ.சாலை, பழைய வண்ணாரப்பேட்டை. |
| 16.11.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | பெரம்பூர் வடக்குப் பகுதி | இராமசாமி திருமண மண்டபம், முத்துக்குமாரசாமி கல்லூரி எதிரில், கொடுங்கையூர். |
| | மாலை 5.00 மணி | ஆர்.கே.நகர் கிழக்குப் பகுதி | செல்வ வாணி மஹால், மணிக்கூண்டு அருகில், தண்டையார்பேட்டை. |
| 22.11.2025 சனிக்கிழமை | மாலை 5.00 மணி | பெரம்பூர் தெற்குப் பகுதி | சீலம் மஹால், எத்திராஜ் சாமி சாலை, கொடுங்கையூர். |
| 23.11.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | ஆர்.கே.நகர் மேற்குப் பகுதி | மரியம் மாளிகை, எண்ணூர் நெடுஞ்சாலை, கொருக்குப்பேட்டை |
| | மாலை 5.00 மணி | இராயபுரம் மேற்குப் பகுதி | ஸ்ரீபேலஸ் திருமண மண்டபம், சூரிய நாராயண தெரு, இராயபுரம் |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 12.11.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி